MC No. 28/2023 PW- 1 21.07.2025

திருமதி. நிர்மலாதேவி க/பெ.கிருஷ்ணராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் எம்.எஸ்.சி.(Information Technology) படித்துள்ளேன். எதிர்மனுதாரர் என்னை திருமணம் செய்வதற்கு வற்புறுத்தியதை நிரூபிப்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிச்சயதார்த்ததிற்கு இரவு 9.00 மணிக்கு வந்ததற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் திருமண நாளிற்கு 2 நாட்களுக்கு முன்பே கும்பகோணத்திற்கு வந்து விட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு அதிக விலையில் பட்டு சட்டை, பட்டு வேஷ்டி எடுக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவருடைய தாயார் நேரடியாக கடைக்கு வந்து வாங்கினார். நாங்கள் அதற்குரிய பணத்தை செலுத்தினோம். ரசீதுகள் தற்போது என்னிடம் இல்லை. நான் வழக்கிற்காக எதிர்மனுதாரர் என்னுடன் புகைப்படம் எடுப்பதற்கு ஒத்துழைக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பாக நாச்சியார்கோயிலுக்கு செல்லும் வழக்கத்தை நாங்கள் சொல்லியிருந்தும் எதிர்மனுதாரர் அதற்கு சம்மதிக்காமல் இருந்தார். நான் சொல்லுவது போல் எதிர்மனுதாரர் நடந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. திருமண சடங்குகளில் எதிர்மனுதாரர் கலந்து கொண்டார் என்றும், என்னுடன் அன்னியோன்யமாக செயல்பட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

திருமணத்தை பதிவு செய்வதற்கு தயாராகத்தான் இருந்தார் என்றாலும் நான் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தயாரும் சேர்ந்து சென்னையில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு 30 பவுன் நகையும், எதிர்மனுதாரருக்கு 3 பவுன் செயினும், ஒரு பவுன் மோதிரமும், 1-1/2 பவுன் கைச்செயினும் போடப்பட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் என்னிடம் தற்போது இல்லை.

2) மேற்கண்ட நகைகள் அனைத்தும் எனது சிறு வயது முதல் என் தாயார் சேமித்து வாங்கியது ஆகும். 30 பவுன் நகையும் என்னிடம் தான் உள்ளது என்றும், எதிர்மனுதாரரிடம் இருப்பதாக வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயருக்கு வைப்பீட்டு தொகை ரூபாய் 2 லட்சம் எனது தகப்பனார் KMBF -ல் கணக்கு வைத்திருந்தார். அதனை எதிர்மனுதாரர் அவருடைய பெயருக்கு மாற்றி தரும்படியாக வற்புறுத்தினார். எதிர்மனுதாரர் அவ்வாறு கேட்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் எதுவும் அதற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் செய்கை குறித்து எந்த காவல் துறையிலும் நான் புகார் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனது பெற்றோர் வீட்டிற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ளக்கூடாது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்காக எல்லா கடமையும் செய்தார் என்றும், அதை நான் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் சாப்பிட்ட பின்பே என்னை சாப்பிட அனுமதிப்பார்கள் என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இரவில் யூ டியூப், வாட்ஸ் அப் பார்த்து விட்டு சத்தமாக கத்துவார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இரவில் எழுந்து 2 மணி நேரம் கழித்து வருவார் என்பதை காண்பிக்க என்னிடம் ஆதாரம் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக இதற்குரிய ஆதாரம் என்னால் தயார் செய்ய இயலாது. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

3) நான் மனு பத்தி 15-ல் சொல்லியுள்ளது போல் சுகவீனத்தில் இல்லை என்றும், சிகிச்சை செய்ததற்கான ஆதாரங்களும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. 06.06.2020 அன்று நானாகவே கும்பகோணத்திற்கு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. 06.06.2020 கொரோனா 1ம் அலைக்கு பின்பாக நிகழ்ந்தது என்றால் 2ம் அலைக்கு பின்பாக நிகழ்ந்தது. எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சித்ததை காண்பிக்கும் விதமாக நான் எந்த ஆவணங்களும் சாட்சியங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் எனது முதல் கணவருக்கும் 2006-ம் ஆண்டு விவாகரத்து ஏற்பட்டது. எனது முதல் கணவருக்கும் எனக்கும் 2006ம் ஆண்டில் ஏற்பட்ட விவாகரத்து தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் கணவர்தான் விவாகரத்து மனுவை தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நான்

தோன்றாம்தரப்பினராக இருந்தேன் என்றால் சரிதான். அதனால் தான் நான் மேற்படி வழக்கிற்குரிய ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று HMOP No.46/2021 தாக்கல் செய்திருந்தார் என்றும், அழைப்பாணை பெற்ற பின்பாக சமரச மையத்திற்கு நான் வழக்கறிஞருடன் ஒரு முறை ஆஜராகியிருந்தேன் என்றும், அதன்பின்பு தொடர்ச்சியாக நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். கொரோனா சமயம் என்பதால் ஆஜராகவில்லை. உள்நோயாளியாக இருந்து அன்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ளேன். HMOP No.46/2021 என்ன நிலையில் உள்ளது என்பதை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நீதிமன்றத்தில் ஆஜராகும்படியாக எனது வழக்கறிஞர் ஆலோசனை கூறினார். வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்டேன் ஆனால் நீதிமன்தற்தில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் ஆஜராகவில்லை. எனது சிகிச்சை தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) நான் இன்றைய தேதி வரையிலும் சிகிச்சையில் தான் உள்ளேன். நான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.05.2023 ம் தேதியன்று புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், மேற்படி புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரில் எதிர்மனுதாரர் என்னை துன்புறுத்தியதாக எந்த

தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய சீர் சாமான் நகைகளை மட்டும் திரும்ப பெற்றுக் கொள்ள புகாரில் கோரியிருந்தேன் என்றால் சரிதான். சீர்வரிசை சாமான்களை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ள கூறியும் நான் அதனை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வேலை பார்ப்பது தொடர்பாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை துன்புறுத்துவதால் எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. என்னை நான் பராமரித்து கொள்ளும் அளவிற்கு கல்வியறிவு பெற்றுள்ளேன், எதிர்மனுதாரர் என்னை பராமரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ நான் சம்மதிக்கும்பட்சத்தில் தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்தான் சமரச மையத்திற்கு ஆஜராகியிருந்தார் என்றும், நான் தான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் விவாகரத்து மனு தாக்கல் செய்திருந்தபோதிலும் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ உண்மையாக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லாததால் தான் மதுரையில் உள்ள மனுவை கும்பகோணத்திற்கு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது நான் சொல்லியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும், ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படாதவை என்றும் என்னை பராமரிக்க எனக்கு போதுமான கல்வியறிவு

இருப்பதாலும் நான் கோரியுள்ள ஜீவனாம்சம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

S MAHALAKSHMI

Digitally signed by S MAHALAKSHMI
Date: 2025.07.21 17:51:45 +0530

*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.